# Monthly Quiz file – January 2026

1. Who won the gold medal in the 7th Carrom World Cup?

A) R. Devika

B) L. Keerthana

C) P. Nirmala

D) S. Kavitha

7வது உலகக் கோப்பை கேரம் போட்டியில் தங்கப் பதக்கத்தினை வென்றவர் யார்?

A) R. தேவிகா

B) L. கீர்த்தனா

C) P. நிர்மலா

D) S. கவிதா

2. Which bank was recognized as the 'Best Bank in India' at The Banker's Bank of the Year Awards 2025?

A) State Bank of India

B) HDFC Bank

C) Bank of Baroda

D) ICICI Bank

தி பேங்கர்ஸ் இதழின் 2025 ஆண்டின் சிறந்த வங்கி விருதுகளில் 'இந்தியாவின் சிறந்த வங்கி' என்று அங்கீகரிக்கப்பட்ட வங்கி எது?

A) பாரத் ஸ்டேட் வங்கி

B) HDFC வங்கி

C) பரோடா வங்கி

D) ICICI வங்கி

3. A buy–sell swap by the RBI is primarily a tool of

A) Fiscal policy

B) Monetary policy

C) Foreign trade regulation

D) Financial market intervention

இந்திய ரிசர்வ் வங்கியின் வாங்குதல்–விற்பனை பரிமாற்றம் முதன்மையாக எத்தகைய செயற்கருவியாகக் கருதப்படுகிறது?

A) நிதிக் கொள்கை

B) பணவியல் கொள்கை

C) வெளிநாட்டு வர்த்தக ஒழுங்குமுறை

D) நிதிச் சந்தையில் குறுக்கீட்டுத் திட்டங்கள்

4. What percentage of reservation for women has been directed in State Bar Council elections?

A) 20%

B) 25%

C) 30%

D) 33%

மாநில வழக்குரைஞர் கழகத் தேர்தல்களில் பெண்களுக்கு எத்தனை சதவீத அளவு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது?

A) 20%

B) 25%

C) 30%

D) 33%

5. The Sujalam Bharat App for managing rural drinking water systems under the Jal Jeevan Mission was launched by

A) Ministry of Health and Family Welfare

B) Ministry of Jal Shakti

C) Ministry of Rural Development

D) Ministry of Environment, Forest and Climate Change

ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் கிராமப்புறக் குடிநீர் விநியோக அமைப்புகளை நிர்வகிப்பதற்கான சுஜாலம் பாரத் செயலி எந்த அமைப்பினால் தொடங்கப்பட்டது?

A) சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

B) ஜல் சக்தி அமைச்சகம்

C) கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம்

D) சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம்

6. Which payment system is recognized as the world's largest retail fast–payment system?

A) NEFT

B) RTGS

C) UPI

D) IMPS

உலகின் மிகப்பெரிய சில்லறை வணிக விரைவுப் பண வழங்கீட்டு முறையாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது எது?

A) NEFT

B) RTGS

C) UPI

D) IMPS

7. Which state is implementing one of India's largest eradication drives against Senna spectabilis?

A) Kerala

B) Karnataka

C) Tamil Nadu

D) Odisha

இந்தியாவின் மிகப்பெரிய சென்னா ஸ்பெக்டபிலிஸ் ஒழிப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துகின்ற மாநிலம் எது?

A) கேரளா

B) கர்நாடகா

C) தமிழ்நாடு

D) ஒடிசா

8. Which of the following is true about the Yellow Line of Israel?

A) It is a natural river boundary.

B) It is a forward military defensive line.

C) It is recognized internationally as Gaza's border.

D) It marks UN–administered zones.

பின்வருவனவற்றில் இஸ்ரேலின் மஞ்சள் கோடு பற்றிய தகவல்களில் எது சரி?

A) இது ஒரு இயற்கையாக அமைந்த நதி எல்லை.

B) இது ஒரு முன்னேறும் இராணுவத்தின் தற்காப்புக் கோடு.

C) இது காசாவின் எல்லையாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

D) இது ஐ.நா. சபையினால் நிர்வகிக்கப்படும் மண்டலங்களைக் குறிக்கிறது.

9. The Past Risk and Return Verification Agency (PaRRVA) initiative was launched by

A) Reserve Bank of India (RBI)

B) Securities and Exchange Board of India (SEBI)

C) Ministry of Finance

D) Insurance Regulatory and Development Authority of India (IRDAI)

கடந்தகால இடர் மற்றும் வருவாய்ச் சரிபார்ப்பு நிறுவனம் (ParRVA) என்ற முன்னெடுப்பு எந்த அமைப்பினால் தொடங்கப் பட்டது?

A) இந்திய ரிசர்வ் வங்கி (RBI)

B) இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI)

C) நிதி அமைச்சகம்

D) இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI)

10. What is the name of the proposed BRICS digital trade currency?

A) Cardano

B) The Unit

C) Ripple

D) Ether

BRICS நாடுகளுக்கென முன்மொழியப்பட்ட டிஜிட்டல் வர்த்தக நாணயத்தின் பெயர் யாது?

A) Cardano

B) The Unit

C) Ripple

D) Ether

11. Choose the correct statement regarding International Mountain Day 2025.

A) International Mountain Day is observed on December 11 every year.

B) The UN declared 2025 as the International Year of Glaciers' Preservation.

C) Mountains cover around 22% of the Earth's land surface.

D) All statements are correct.

சர்வதேச மலை தினம் 2025 தொடர்பான சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) சர்வதேச மலை தினம் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 11 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.

B) 2025 ஆம் ஆண்டை சர்வதேச பனிப்பாறைகள் பாதுகாப்பு ஆண்டாக ஐ.நா. சபை அறிவித்துள்ளது.

C) பூமியின் நிலப்பரப்பில் சுமார் 22% பகுதியில் மலைகள் பரவியுள்ளன.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

12. Which is the first human–rated engine for ISRO's Gaganyaan mission?

A) Vikas

B) CE–20

C) S200

D) HEPS

இஸ்ரோவின் ககன்யான் திட்டத்திற்கான முதல் மனிதப் பயணப் பயன்பாட்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட எஞ்சின் எது?

A) விகாஸ்

B) CE–20

C) S200

D) HEPS

13. The "Your Money, Your Right" campaign is related to

A) Digital payments promotion

B) Claiming unclaimed financial assets

C) Tax filing awareness

D) Investment in mutual funds

"உங்கள் பணம், உங்கள் உரிமை" பிரச்சாரம் எதனுடன் தொடர்புடையது?

A) டிஜிட்டல் வழிக் கொடுப்பனவுகளை ஊக்குவித்தல்

B) உரிமை கோரப்படாத நிதிச் சொத்துக்களை கோருதல்

C) வரித் தாக்கல் குறித்த விழிப்புணர்வு

D) பரஸ்பர நிதிகளில் முதலீடு

14. What is the name of the new shieldtail snake species discovered in the Siruvani Hills?

A) Uropeltis woodmasoni

B) Rhinophis siruvaniensis

C) Python molurus

D) Naja naja

சிறுவாணி மலைகளில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கேடய வால் பாம்பு இனத்தின் பெயர் யாது?

A) யூரோபெல்டிஸ் வுட்மசோனி

B) ரைனோஃபிஸ் சிறுவானியென்சிஸ்

C) பைதான் மோலுரஸ்

D) நஜா நஜா

15. What was the main focus of the planetary–defence drill?

A) Monitoring solar flares

B) Tracking Near–Earth objects

C) Satellite navigation

D) Space debris removal

கிரக–பாதுகாப்புப் பயிற்சியின் முக்கிய நோக்கம் யாது?

A) சூரியச் சுடர்களைக் கண்காணித்தல்

B) பூமிக்கு அருகிலுள்ள விண்பொருட்களைக் கண்காணித்தல்

C) செயற்கைக்கோள் வழிசெலுத்தல்

D) விண்வெளிக் குப்பைகளை அகற்றுதல்

16. Choose the incorrect statement regarding CITES.

A) CITES was initiated by IUCN.

B) CITES came into force on 1 July 1965.

C) CITES has 185 member countries as of 2025.

D) CITES regulates trade in endangered species of wild fauna and flora.

CITES தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) CITES ஆனது IUCN அமைப்பினால் தொடங்கப்பட்டது.

B) CITES 1965 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.

C) 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி CITES 185 உறுப்பினர் நாடுகளைக் கொண்டுள்ளது.

D) CITES என்பது அருகி வரும் காட்டு விலங்குகள் மற்றும் தாவர இனங்களின் மீதான வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துகிறது.

17. Which Indian festival was added to the UNESCO Intangible Cultural Heritage List in 2025?

A) Deepavali

B) Holi

C) Durga Puja

D) Makar Sankranti

2025 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்ட இந்தியத் திருவிழா எது?

A) தீபாவளி

B) ஹோலி

C) துர்க்கை பூஜை

D) மகர சங்கராந்தி

18. Choose the incorrect statement(s) regarding India's Antarctic research plans.

A) India plans to build a new Antarctic research station called Maitri II.

B) The station is expected to be completed by 2032.

C) Maitri II replaces India's first Antarctic station established in 2010.

D) All of the above.

இந்தியாவின் அண்டார்டிக் ஆராய்ச்சித் திட்டங்கள் தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) மைத்ரி II என்ற புதிய அண்டார்டிக் ஆராய்ச்சி நிலையத்தை கட்டமைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

B) இந்த நிலையத்தின் கட்டுமானம் 2032 ஆம் ஆண்டிற்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

C) மைத்ரி II ஆனது, 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தியாவின் முதல் அண்டார்டிக் நிலையத்திற்கு மாற்றாக அமைய உள்ளது.

D) மேற்கூறிய அனைத்தும்.

19. hich place hosted the Charaichung Festival?

A) Jorhat

B) Majuli

C) Guwahati

D) Dibrugarh

சராய்ச்சுங் விழாவினை எந்த இடம் நடத்தியது?

A) ஜோர்ஹாட்

B) மஜுலி

C) கௌஹாத்தி

D) திப்ருகர்

20. Choose the incorrect statement regarding Kalaignar Magalir Urimai Thittam.

A) It was launched on September 15, 2024.

B) The scheme provides monthly financial assistance to women heads of families.

C) The assistance amount under the scheme is ₹1,000 per month.

D) All of the above.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் குறித்த தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) இது 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.

B) இந்தத் திட்டம் குடும்பத் தலைவிகளான பெண்களுக்கு மாதாந்திர நிதி உதவி வழங்குகிறது.

C) இந்தத் திட்டத்தின் கீழ் மாதத்திற்கு 1,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

D) மேற்கூறிய அனைத்தும்.

21. Which state introduced a new law to dismantle the Pagdi system?

A) Gujarat

B) Maharashtra

C) West Bengal

D) Tamil Nadu

பக்டி அமைப்பை அகற்ற புதிய சட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?

A) குஜராத்

B) மகாராஷ்டிரா

C) மேற்கு வங்காளம்

D) தமிழ்நாடு

22. Which city ranked recently first for the worst Air Quality Index (AQI)?

A) Lahore

B) Beijing

C) New Delhi

D) Dhaka

மோசமான காற்று தரக் குறியீட்டில் (AQI) சமீபத்தில் முதலிடம் பெற்ற நகரம் எது?

A) லாகூர்

B) பெய்ஜிங்

C) புது டெல்லி

D) டாக்கா

23. Which state won the National Energy Conservation Award for the fourth consecutive year?

A) Telangana

B) Tamil Nadu

C) Andhra Pradesh

D) Karnataka

தொடர்ந்து நான்காவது ஆண்டாக தேசிய எரிசக்தி வளங்காப்பு விருதை வென்றுள்ள மாநிலம் எது?

A) தெலுங்கானா

B) தமிழ்நாடு

C) ஆந்திரப் பிரதேசம்

D) கர்நாடகா

24. Choose the incorrect statements regarding Tamil Nadu's economy.

A) Tamil Nadu recorded a Gross State Domestic Product (GSDP) growth rate of 16 percent, the highest among Indian States.

B) The total GSDP of Tamil Nadu is ₹31.19 lakh crore.

C) Tamil Nadu's per capita income crossed ₹1.9 lakh per year.

D) Tamil Nadu ranks third in per capita income, after Delhi, Telangana, and Karnataka.

தமிழ்நாட்டின் பொருளாதாரம் தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) தமிழ்நாடு மாநிலத்தில் 16 சதவீத மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வளர்ச்சி விகிதம் பதிவானது என்றதோடு இது இந்திய மாநிலங்களில் மிக அதிகபட்சமாகும்.

B) தமிழ்நாட்டின் மொத்த GSDP 31.19 லட்சம் கோடி ரூபாயாகும்.

C) தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் ஆண்டிற்கு 1.9 லட்சம் ரூபாயை தாண்டியது.

D) தனிநபர் வருமானத்தில் டெல்லி, தெலுங்கானா மற்றும் கர்நாடகாவை அடுத்து தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.

25. What is the new proposed name for replacing National Rural Employment Guarantee Scheme (NREGS)?

A) Pujya Bapu Gramin Rozgar Yojana

B) Mahatma Gandhi Gramin Rozgar Yojana

C) Gram Rozgar Mission

D) Bapu National Employment Scheme

தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தினை (NREGS) பதிலீடு செய்வதற்காக முன்மொழியப் பட்டுள்ள புதிய திட்டத்தின் பெயர் யாது?

A) பூஜ்யா பாபு கிராமின் ரோஸ்கர் யோஜனா

B) மகாத்மா காந்தி கிராமின் ரோஸ்கர் யோஜனா

C) கிராம் ரோஸ்கர் திட்டம்

D) பாபு தேசிய வேலைவாய்ப்பு திட்டம்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ***B*** | 2. | ***C*** | 3. | ***B*** | 4. | ***C*** | 5. | ***B*** | 6. | ***C*** | 7. | ***C*** | 8. | ***B*** | 9. | ***B*** | 10. | ***B*** |
| 11. | ***D*** | 12. | ***A*** | 13. | ***B*** | 14. | ***B*** | 15. | ***B*** | 16. | ***B*** | 17. | ***A*** | 18. | ***C*** | 19. | ***B*** | 20. | ***A*** |
| 21. | ***B*** | 22. | ***C*** | 23. | ***C*** | 24. | ***D*** | 25. | ***A*** | | | | | | | | | | |

26. Choose the incorrect statement regarding GI tagged products.

A) Ponduru Khadi – Andhra Pradesh

B) Ambaji Marble – Rajasthan

C) Poovan banana – Authoor

D) Lemon – Villiseri

புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) பொந்தூரு காதி – ஆந்திரப் பிரதேசம்

B) அம்பாஜி பளிங்குக் கல் – இராஜஸ்தான்

C) பூவம் வாழைப்பழம் – ஆத்தூர்

D) எலுமிச்சை பழம் – வில்லிசேரி

27. Which of the following is India's first space–based solar observatory?

A) INSAT–3C

B) Astrosat

C) RISAT–2B

D) Aditya–L1

பின்வருவனவற்றில் இந்தியாவின் முதல் விண்வெளி அடிப்படையிலான சூரிய ஆய்வகம் எது?

A) INSAT–3C

B) ஆஸ்ட்ரோசாட்

C) RISAT–2B

D) ஆதித்யா–L1

28. Which lake was recently declared India's 96th Ramsar site?

A) Dal Lake

B) Chilika Lake

C) Siliserh Lake

D) Loktak Lake

சமீபத்தில் இந்தியாவின் 96வது ராம்சர் தளமாக அறிவிக்கப்பட்ட ஏரி எது?

A) தால் ஏரி

B) சிலிக்கா ஏரி

C) சிலிசெர் ஏரி

D) லோக்டாக் ஏரி

29. Choose the correct statements regarding the Southern Ocean Carbon 'Anomaly'.

A) The Southern Ocean absorbs a significant portion of excess atmospheric carbon dioxide.

B) The term "carbon anomaly" refers to variations in the Southern Ocean's capacity to absorb carbon dioxide.

C) Changes in wind patterns and ocean circulation influence this anomaly.

D) The anomaly indicates a permanent loss of the Southern Ocean's role as a global carbon sink.

தெற்குப் பெருங்கடல் கார்பன் 'முரண்பாடு' தொடர்பான சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) தெற்குப் பெருங்கடல் அதிகப்படியான குறிப்பிடத்தக்க அளவிலான வளிமண்டலக் கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சுகிறது.

B) "கார்பன் முரண்" என்ற சொல் தெற்குப் பெருங்கடலின் கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சும் திறனில் உள்ள மாறுபாடுகளைக் குறிக்கிறது.

C) காற்று வடிவங்கள் மற்றும் பெருங்கடல் சுழற்சியில் ஏற்படும் மாற்றங்கள் இந்த முரண் நிலையைப் பாதிக்கின்றன.

D) தெற்குப் பெருங்கடல் உலகளாவிய கார்பன் உறிஞ்சு பகுதியாக இருப்பதன் பங்கை நிரந்தரமாக இழப்பதை இந்த முரண் நிலை குறிக்கிறது.

30. Which district emerged as the top tourist destination in Tamil Nadu?

A) Kanyakumari

B) Tiruchi

C) Thanjavur

D) Nilgiris

தமிழ்நாட்டின் முன்னணிச் சுற்றுலா தலமாக உருவெடுத்துள்ள மாவட்டம் எது?

A) கன்னியாகுமரி

B) திருச்சி

C) தஞ்சாவூர்

D) நீலகிரி

31. Choose the incorrect statements regarding the Viksit Bharat – Guarantee for Rozgar and Ajeevika Mission (Gramin) Act, 2025.

A) The Mahatma Gandhi National Rural Employment Guarantee Act – 2005 was passed in December 2005.

B) The new Act provides a statutory guarantee of not less than 125 days of wage employment.

C) States can notify an aggregated pause period aggregating to 60 days in a financial year.

D) All the statements are correct.

விக்ஸித் பாரத் – ரோஸ்கர் மற்றும் அஜீவிகா மிஷன் (கிராமின்) சட்டம், 2025 தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டம் – 2005 ஆனது 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டது.

B) புதிய சட்டம் 125 நாட்களுக்குக் குறையாத கூலி வேலைவாய்ப்பிற்கான சட்டப்பூர்வ உத்தரவாதத்தை வழங்குகிறது.

C) ஒரு நிதியாண்டில் 60 நாட்கள் வரை ஒருங்கிணைந்த இடைநிறுத்த காலத்தை மாநில அரசுகள் அறிவிக்கலாம்.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

32. Who is the Chairman of 16th Finance Commission?

A) Arvind Panagariya

B) N.K. Singh

C) Montek Singh Ahluwalia

D) Kaushik Basu

16வது நிதி ஆணையத்தின் தலைவர் யார்?

A) அரவிந்த் பனகாரியா

B) N.K. சிங்

C) மான்டெக் சிங் அலுவாலியா

D) கௌசிக் பாசு

33. Which NASA spacecraft orbiting Mars recently lost contact with Earth ground stations?

A) Mars Reconnaissance Orbiter

B) Perseverance rover

C) MAVEN

D) Mars Odyssey

செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றி வந்த எந்த நாசா விண்கலம் சமீபத்தில் பூமியின் தரைக் கட்டுப்பாட்டு நிலையங்களுடனான தொடர்பை இழந்தது?

A) மார்ஸ் ரிக்கனைசன்ஸ் சுற்றுக்கலம்

B) பெர்சீவெரன்ஸ் உலாவிக் கலம்

C) மேவன்

D) மார்ஸ் ஒடிஸி

34. Nitrofurans are banned mainly due to which of the following reasons?

A) Antibiotic resistance

B) Environmental toxicity

C) Carcinogenic nature

D) Reduced animal growth

நைட்ரோஃபுரான்கள் ஆனது பிரதானமாக பின்வரும் எந்தக் காரணத்திற்காக தடை செய்யப் பட்டுள்ளன?

A) நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு

B) சுற்றுச்சூழல் நஞ்சேற்றம்

C) புற்றுநோய் ஏற்படுத்தும் தன்மை

D) விலங்கு வளர்ச்சி குறைதல்

35. Gonorrhoea is caused by

A) Bacteria

B) Virus

C) Fungus

D) Protozoa

மேகவெட்டை நோய் எதனால் ஏற்படுகிறது?

A) பாக்டீரியா

B) வைரஸ்

C) பூஞ்சை

D) புரோட்டோசோவா

36. The first woman officer, who graduate from the Indian Military Academy (IMA), Dehradun is

A) Shikha Sharma

B) Sai Jadhav

C) Gunjan Saxena

D) Vandana Rao

டேராடூனில் உள்ள இந்திய இராணுவ அகாடமியில் (IMA) பட்டம் பெற்ற முதல் பெண் அதிகாரி யார்?

A) ஷிகா சர்மா

B) சாய் ஜாதவ்

C) குஞ்சன் சக்சேனா

D) வந்தனா ராவ்

37. The state bird of Himachal Pradesh is

A) Himalayan Monal

B) Cheer Pheasant

C) Western Tragopan

D) Rufous–necked Hornbill

இமாச்சலப் பிரதேசத்தின் மாநிலப் பறவை எது?

A) இமயமலை மோனல்

B) சியர் ஃபெசண்ட்

C) மேற்கு டிராகோபன்

D) செம்பழுப்பு கழுத்து இருவாச்சி

38. Which railway station received the National Energy Conservation Award 2025 in the transport category?

A) Miyana Railway Station, Madhya Pradesh

B) Howrah Railway Station, West Bengal

C) Secunderabad Railway Station, Telangana

D) Jaipur Railway Station, Rajasthan

போக்குவரத்துப் பிரிவில் 2025 ஆம் ஆண்டிற்கான தேசிய எரிசக்தி வளங்காப்பு விருதைப் பெற்ற இரயில் நிலையம் எது?

A) மியானா இரயில் நிலையம், மத்தியப் பிரதேசம்

B) ஹவுரா இரயில் நிலையம், மேற்கு வங்காளம்

C) செகந்திராபாத் இரயில் நிலையம், தெலுங்கானா

D) ஜெய்ப்பூர் இரயில் நிலையம், இராஜஸ்தான்

39. Vijay Diwas is observed in India on

A) August 27

B) December 16

C) January 12

D) March 23

இந்தியாவில் விஜய் திவாஸ் எப்போது அனுசரிக்கப்படுகிறது?

A) ஆகஸ்ட் 27

B) டிசம்பர் 16

C) ஜனவரி 12

D) மார்ச் 23

40. Operation Thunder 2025 is related to

A) Cybercrime

B) Human trafficking

C) Wildlife and forestry crime

D) Counterfeit currency

தண்டர் நடவடிக்கை 2025 எதனுடன் தொடர்புடையது?

A) இணையவெளிக் குற்றம்

B) ஆட் கடத்தல்

C) வனவிலங்கு மற்றும் வனத்துறை குற்றம்

D) கள்ள நோட்டுகள்

41. Choose the correct statement about Thoothukudi pearls.

A) Thoothukudi pearls were traded in Roman, Greek, Arab, and East Asian markets.

B) Korkai, near present–day Thoothukudi, was an early pearl trade centre.

C) Korkai is mentioned in Sangam literature such as Pattinappaalai and Madurai Kanchi.

D) All statements are correct.

தூத்துக்குடி முத்துக்கள் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) தூத்துக்குடி முத்துக்கள் ரோமன், கிரேக்கம், அரபு மற்றும் கிழக்கு ஆசியச் சந்தைகளில் வர்த்தகம் செய்யப்பட்டன.

B) இன்றைய தூத்துக்குடிக்கு அருகிலுள்ள கொற்கை, ஆரம்பகால முத்து வர்த்தக மையமாக இருந்தது.

C) பட்டினப்பாலை மற்றும் மதுரைக் காஞ்சி போன்ற சங்க இலக்கியங்களில் கொற்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

D) அனைத்து கூற்றுகளும் சரியானவை.

42. Which tribe performs the traditional Bison Horn Maria dance?

A) Muria

B) Halba

C) Dandami Madia

D) Baiga

பாரம்பரிய காட்டெருது கொம்பு அணிந்த மரியா நடனத்தை நிகழ்த்துகின்ற பழங்குடியினர் குழு எது?

A) முரியா

B) ஹல்பா

C) தண்டாமி மடியா

D) பைகா

43. Who is the author of 'The One: Cricket, My Life and More'?

A) Virat Kohli

B) Shikhar Dhawan

C) Rohit Sharma

D) MS Dhoni

'The One: Cricket, My Life and More' என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார்?

A) விராட் கோலி

B) ஷிகர் தவான்

C) ரோஹித் சர்மா

D) M.S. தோனி

44. Which port in India is set to launch a Green Hydrogen Pilot Project?

A) Kandla Port

B) Jawaharlal Nehru Port

C) V.O. Chidambaranar Port

D) Paradip Port

இந்தியாவில் பசுமை ஹைட்ரஜன் சோதனைத் திட்டத்தைத் தொடங்க உள்ள துறைமுகம் எது?

A) கண்ட்லா துறைமுகம்

B) ஜவஹர்லால் நேரு துறைமுகம்

C) வ.உ. சிதம்பரனார் துறைமுகம்

D) பாரதீப் துறைமுகம்

45. Which country has banned social media use for teenagers below 16 years of age?

A) Canada

B) UK

C) New Zealand

D) Australia

16 வயதுக்குட்பட்ட இளையோர்களுக்கு சமூக ஊடகப் பயன்பாட்டைத் தடை செய்து உள்ள நாடு எது?

A) கனடா

B) ஐக்கியப் பேரரசு

C) நியூசிலாந்து

D) ஆஸ்திரேலியா

46. Which places have been declared Holy Cities by the Punjab government?

A) Amritsar, Patiala, Ludhiana

B) Amritsar, Sri Anandpur Sahib, Talwandi Sabo

C) Jalandhar, Bathinda, Ferozepur

D) Mohali, Pathankot, Hoshiarpur

பஞ்சாப் அரசாங்கத்தால் புனித நகரங்களாக அறிவிக்கப்பட்ட இடங்கள் யாவை?

A) அமிர்தசரசு, பாட்டியாலா, லூதியானா

B) அமிர்தசரசு, ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப், தால்வண்டி சபோ

C) ஜலந்தர், பதிண்டா, ஃபெரோஸ்பூர்

D) மொஹாலி, பதான்கோட், ஹோஷியார்பூர்

47. Choose the incorrect statements regarding Makhana.

A) Makhana is nutritious, rich in protein, fibre, antioxidants, and is high glycaemic.

B) Makhana is the edible seed of Euryale ferox, an aquatic plant grown in ponds and wetlands.

C) Bihar contributes around 85% of India's Makhana production.

D) Makhana is also known as fox nut or gorgon nut.

மக்கானா (தாமரைப் பூ விதை) தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) மக்கானா சத்துக்கள் நிறைந்தது என்பதோடு புரதம், நார்ச்சத்து, ஆக்ஸிஜனேற்றிகள் நிறைந்தது மற்றும் அதிக கிளைசெமிக் கொண்டது.

B) மக்கானா என்பது குளங்கள் மற்றும் ஈரநிலங்களில் வளர்க்கப்படும் நீர்வாழ் தாவரமான யூரியால் ஃபெராக்ஸின் உண்ணக்கூடிய விதையாகும்.

C) இந்தியாவின் மக்கானா உற்பத்தியில் பீகார் சுமார் 85% பங்களிக்கிறது.

D) மக்கானா நரி கொட்டை அல்லது கோர்கன் கொட்டை என்றும் அழைக்கப்படுகிறது.

48. White Spot Disease primarily affects which type of farmed animal?

A) Fish

B) Shrimp

C) Cattle

D) Poultry

வெண்புள்ளி நோய் முதன்மையாக எந்த வகையான வளர்ப்பு விலங்கைப் பாதிக்கிறது?

A) மீன்

B) இறால்

C) கால்நடை

D) வளர்ப்புக் கோழி

49. Choose the incorrect statement regarding Smooth–coated Otter.

A) Smooth–coated otter is the largest otter species found in Asia.

B) It is listed as Vulnerable on the IUCN Red List.

C) It is protected under Schedule II of the Wildlife Protection Act, 1972.

D) Tamil Nadu has launched a programme to protect the species in the Cauvery Delta.

ஆற்று நீர்நாய் பற்றிய தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) ஆசியாவில் காணப்படும் மிகப்பெரிய நீர்நாய் இனம் ஆற்று நீர்நாய் ஆகும்.

B) இது IUCN செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.

C) இது 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் கீழ் பாதுகாக்கப் படுகிறது.

D) காவிரி டெல்டாவில் உள்ள இந்த உயிரினங்களைப் பாதுகாக்க தமிழ்நாடு அரசு ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

50. The International Labour Organization (ILO) report identifies which country as one of the world's most overworked?

A) Germany

B) France

C) India

D) Sweden

சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) அறிக்கை உலகின் அதிக வேலைப்பளு உள்ள நாடுகளில் ஒன்றாக குறிப்பிட்டுள்ள நாடு எது?

A) ஜெர்மனி

B) பிரான்சு

C) இந்தியா

D) சுவீடன்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26. | ***B*** | 27. | ***D*** | 28. | ***C*** | 29. | ***D*** | 30. | ***B*** | 31. | ***A*** | 32. | ***A*** | 33. | ***C*** | 34. | ***C*** | 35. | ***A*** |
| 36. | ***B*** | 37. | ***C*** | 38. | ***A*** | 39. | ***B*** | 40. | ***C*** | 41. | ***D*** | 42. | ***C*** | 43. | ***B*** | 44. | ***C*** | 45. | ***D*** |
| 46. | ***B*** | 47. | ***A*** | 48. | ***B*** | 49. | ***C*** | 50. | ***C*** | | | | | | | | | | |

---

51. Lokapriya Gopinath Bardoloi International Airport is located in

A) Dispur

B) Guwahati

C) Jorhat

D) North Lakhimpur

லோகப்ரியா கோபிநாத் பர்தோலோய் சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள இடம் எது?

A) திஸ்பூர்

B) கௌஹாத்தி

C) ஜோர்ஹாட்

D) வடக்கு லக்கிம்பூர்

52. Which country is currently facing a severe water crisis?

A) Iraq

B) Iran

C) Syria

D) Turkey

தற்போது கடுமையான நீர் நெருக்கடியை எதிர்கொள்கின்ற நாடு எது?

A) ஈராக்

B) ஈரான்

C) சிரியா

D) துருக்கி

53. Choose the incorrect statement regarding India's SDG commitment on child marriage.

A) India has committed to ending child marriage by 2030.

B) The target applies only to urban areas.

C) Child marriage among women aged 18–29 declined between 2005–06 and 2019–21.

D) All statements are correct.

குழந்தைத் திருமணம் குறித்த இந்தியாவின் SDG உறுதிப்பாடு குறித்த தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) 2030 ஆம் ஆண்டிற்குள் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வர உள்ளதாக இந்தியா உறுதியளித்துள்ளது.

B) இந்த இலக்கு நகர்ப்புறங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

C) 2005–06 மற்றும் 2019–21 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 18–29 வயதுடைய பெண்களிடையே குழந்தை திருமணம் குறைந்துள்ளது.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

54. The newly discovered Channa Bhoi is the species of

A) Fish

B) Crab

C) Snail

D) Butterfly

புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட சன்னா போய் எந்த இனத்தைச் சேர்ந்தது?

A) மீன்

B) நண்டு

C) நத்தை

D) வண்ணத்துப்பூச்சி

55. Which two countries are participating in Exercise Desert Cyclone–II?

A) India and Saudi Arabia

B) India and Oman

C) India and the United Arab Emirates (UAE)

D) India and Qatar

டெசெர்ட் சைக்ளோன்–II பயிற்சியில் பங்கேற்கும் இரு நாடுகள் யாவை?

A) இந்தியா மற்றும் சவுதி அரேபியா

B) இந்தியா மற்றும் ஓமன்

C) இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE)

D) இந்தியா மற்றும் கத்தார்

56. India's first dedicated Forest University will be established in

A) Uttar Pradesh

B) Madhya Pradesh

C) Chhattisgarh

D) Maharashtra

இந்தியாவின் முதல் பிரத்தியேக வனப் பல்கலைக்கழகம் எங்கு நிறுவப்பட உள்ளது?

A) உத்தரப் பிரதேசம்

B) மத்தியப் பிரதேசம்

C) சத்தீஸ்கர்

D) மகாராஷ்டிரா

57. Who was the chief designer of the Statue of Unity?

A) Anish Kapoor

B) Subodh Gupta

C) Ram Vanji Sutar

D) Satish Gujral

ஒற்றுமை சிலையின் தலைமை வடிவமைப்பாளர் யார்?

A) அனிஷ் கபூர்

B) சுபோத் குப்தா

C) ராம் வஞ்சி சுதர்

D) சதீஷ் குஜ்ரால்

58. Choose the correct statement regarding Erode Turmeric.

A) Erode turmeric has high curcumin content (2.5%–3.9%).

B) Erode hosts the second–largest turmeric market in India after Nizamabad, Telangana.

C) Turmeric cultivation in Erode covers over 30% of Tamil Nadu's turmeric area.

D) All statements are correct.

ஈரோடு மஞ்சள் தொடர்பான சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) ஈரோடு மஞ்சளில் அதிக குர்குமின் உள்ளடக்கம் (2.5%–3.9%) உள்ளது.

B) தெலுங்கானாவின் நிஜாமாபாத்திற்குப் பிறகு இந்தியாவின் இரண்டாவது பெரிய மஞ்சள் சந்தையை ஈரோடு கொண்டுள்ளது.

C) ஈரோட்டின் மஞ்சள் சாகுபடி தமிழ்நாட்டின் மஞ்சள் பரப்பளவில் 30% க்கும் அதிகமாக உள்ளது.

D) அனைத்து கூற்றுகளும் சரியானவை.

59. Which country recorded the highest number of doping violations in the world?

A) Brazil

B) Moracco

C) Mexico

D) India

உலகில் அதிக எண்ணிக்கையிலான ஊக்க மருந்து விதிமீறல்கள் பதிவான நாடு எது?

A) பிரேசில்

B) மொராக்கோ

C) மெக்சிகோ

D) இந்தியா

60. The theme of International Migrants Day 2025 is

A) Migration for Peace

B) My Great Story: Cultures and Development

C) Migration and Society

D) Migration and Environment

2025 ஆம் ஆண்டு சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தின் கருத்துரு என்ன?

A) Migration for Peace

B) My Great Story: Cultures and Development

C) Migration and Society

D) Migration and Environment

61. According to the IUCN Red List, the clouded leopard is classified as

A) Vulnerable

B) Endangered

C) Critically Endangered

D) Near Threatened

படைச் சிறுத்தை IUCN செந்நிறப் பட்டியலில் எந்த பிரிவில் வகைப்படுத்தப் படுகிறது?

A) எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனம்

B) அருகி வரும் இனம்

C) மிக அருகி வரும் இனம்

D) அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனம்

62. Ayushman Vay Vandana scheme is targeted at

A) Children Below 13

B) Adults 18–60

C) Senior citizens aged 70 and above

D) Pregnant women

ஆயுஷ்மான் வய வந்தனா திட்டம் எந்தப் பிரிவினரை இலக்காகக் கொண்டது?

A) 13 வயதிற்குட்பட்ட குழந்தைகள்

B) 18–60 வயதுடைய பெரியவர்கள்

C) 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட முதியோர்

D) கர்ப்பிணிப் பெண்கள்

63. Which mineral found in Indian coastal sands is the primary source of rare earth elements (REEs)?

A) Ilmenite

B) Monazite

C) Rutile

D) Garnet

இந்தியக் கடலோர மணலில் காணப்படும் எந்தக் கனிமம் அருமண் கூறுகளின் (REEs) முதன்மை ஆதாரமாக உள்ளது?

A) இல்மனைட்

B) மோனாசைட்

C) ரூடைல்

D) கார்னெட்

64. What is the main purpose of "e–Swasthya Samvad"?

A) To create a unified digital system for hospital patient records

B) To monitor public health insurance and claim settlements

C) To enhance governance, transparency, and coordination in medical education

D) To provide telemedicine services in rural areas

"இ–ஸ்வஸ்த்ய சம்வாத்" தளத்தின் முக்கிய நோக்கம் என்ன?

A) மருத்துவமனை நோயாளிப் பதிவுகளுக்கு ஒருங்கிணைந்த டிஜிட்டல் அமைப்பை உருவாக்குதல்

B) பொது சுகாதாரக் காப்பீடு மற்றும் உரிமைக் கோரல் தீர்வுகளை கண்காணித்தல்

C) மருத்துவக் கல்வியில் நிர்வாகம், வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்

D) கிராமப்புறங்களில் தொலை மருத்துவச் சேவைகளை வழங்குதல்

65. The 'Green to Gold' initiative mainly focuses on the cultivation of

A) Industrial hemp

B) Medicinal cannabis

C) Aromatic plants

D) Cash crops

'Green to Gold' என்ற முன்னெடுப்பு முதன்மையாக எந்தப் பயிரின் சாகுபடியில் கவனம் செலுத்துகிறது?

A) தொழில்துறை கஞ்சா பயிர்

B) மருத்துவப் பயன்பாட்டுக் கஞ்சா பயிர்

C) நறுமணத் தாவரங்கள்

D) பணப்பயிர்கள்

66. Choose the incorrect statement(s) regarding the launch of Pradhan Mantri Gram Sadak Yojana (PMGSY).

A) PMGSY was launched on 25 December 2000.

B) It was launched on the birth anniversary of Vajpayee.

C) It was launched by the Ministry of Road Transport and Highways.

D) It is a rural infrastructure programme.

பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (PMGSY) தொடங்கப்பட்டது தொடர்பான தவறான கூற்றுக்களைத் தேர்ந்தெடுக்கவும்.

A) PMGSY டிசம்பர் 25, 2000 அன்று தொடங்கப்பட்டது.

B) இது வாஜ்பாயின் பிறந்தநாளில் தொடங்கப்பட்டது.

C) இது சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தால் தொடங்கப் பட்டது.

D) இது ஒரு கிராமப்புற உள்கட்டமைப்புத் திட்டமாகும்.

67. The maiden overseas voyage of INSV Kaundinya is to

A) Sri Lanka

B) Oman

C) Indonesia

D) Maldives

INSV கௌண்டின்யாவின் முதல் வெளிநாட்டுப் பயணம் எந்த நாட்டிற்கு மேற்கொள்ளப் பட்டது?

A) இலங்கை

B) ஓமன்

C) இந்தோனேசியா

D) மாலத்தீவுகள்

